NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 11 August 2022

# 200 ஆண்டுகால உயிரினங்களின் தோற்றத்தை மின்னிலக்க வடிவமாக்கும் திட்டம் தொடக்கம்

சிங்கப்பூர் தீவைச் சுற்றிலும் கடந்த 200 ஆண்டுகளாகக் காணப்பட்ட இயற்கை உயிரினங்களில் மிக முக்கியமானவற்றின் உருவமாதிரிகளை மின்னிலக்க வடிவத்தில் பாதுகாப்பதற்கான ஐந்தாண்டுத் திட்டம் நேற்று சிங்கப்பூரிலும் லண்டனிலும் அதிகாரபூர்வமாகத் தொடங்கியது.

இதற்காக, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் லீ கோங் சியான் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் விஞ்ஞானிகளும் லண்டனின் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் போன்ற பங்காளித்துவ அமைப்புகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் அரிய உயிரினங்களை மின்னிலக்க வடிவத்தில் பட்டியலிடுவர்.

உதாரணத்திற்கு, சிங்கப்பூரில் முதன்முதலாகக் காணப்பட்ட பாம்பிற்கு அறிவியல் பெயர் சூட்டியது தொடர்பான தகவல்களை அவர்கள் ஆவணப்படுத்துவர்.

ஒரு நாட்டின் பல்லுயிர்த் தரவுகளை இணையம் வழியாக உலகிற்கு அளிக்கும் அனைத்துலக ரீதியிலான முதல் முயற்சியாக இந்த மின்னிலக்கத் திட்டம் விளங்குகிறது.




லண்டன் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டு உள்ள அரிய உயிரினங்களின் உருவமாதிரிகள். **படம்: சிக்னிஃபை ஸ்பெசிமென்**

சிங்கப்பூர் சுதந்திரம் அடைவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான உயிரினங்களின் உருவமாதிரிகள் காலனித்துவ மரபு கருதி பிரிட்டனில் வைக்கப்பட்டுள்ளதாக லீ கோங் சியான் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் தலைவர் இணைப் பேராசிரியர் டேரன் இயோ கூறினார்.

அருங்காட்சியகத்தின் ஆலோசனைக் குழுத் தலைவராக நாடாளுமன்ற நாயகர் டான் சுவான் ஜின் உள்ளார். ஐந்தாண்டு மின்னிலக்கத் திட்டத் தொடக்க நிகழ்வின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அவர், “நாடுகள் எவ்வாறு ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டு உள்ளன என்பதை இயற்கை வரலாறு தொடர்பான ஆய்வுகள் மூலம் கற்றுக்கொள்வது, பகிர்வு நிறைந்த வருங்காலத்தை உருவாக்குவதில் மிகவும் முக்கியம்,” என்று கூறினார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.